# தமிழ்ப் பயிற்சிப் பட்டறை

இளந்தமிழர் இலக்கியப் பேரவையின் தலைவர் வழக்கறிஞர் முனீஸ்வரன் தமிழ்ப் பயிற்சிப் பட்டறையின் (27.08.2019) பொருளாகக் கவிதை எழுதுதல் பற்றியும் பேச்சுத் திறமையை வெளிப்படுத்தும் சூட்சுமத்தைக் குறித்தும் இளநிலை மாணவர்களிடம் அவர்கள் விரும்பும் வகையில் விளக்கினார்.

கவிதை எழுதும் போது சுருக்கமான சொற்கள் இருக்க வேண்டும் என்றும், முடிவு கேள்விகளோடு இருக்கலாம் என்றும், எழுச்சிமிக்க கவிதைகள் எழுதுதல் நலம் என்றும் கூறினார். கவிதைகளில் சமூகப் பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும் சொல்லப்பட வேண்டும் என்று வாசகர்கள் எதிர்பார்ப்பர் என்ற உண்மையை விளக்கியதுடன் எல்லா மாணவர்களையும் அவர்களுக்குப் பிடித்தமான தலைப்பில் ஒரு கவிதை எழுதச் சொல்லி அதை அவரவர் குரலில் வாசிக்க வைத்து ஒவ்வொருவருக்கும் தன்னம்பிக்கை ஊட்டினார்.

பேச்சுக்கலையில் குரல் வளமும், ஏற்ற இறக்கமும் மிக முக்கியம். எடுப்பு என்பது பேச்சை எவ்வாறு தொடங்க வேண்டும் என்று சொல்கிறது. தொடங்கும் போது பொன்மொழிகள், கவிதைகள் போன்றவற்றையும் சொல்லித் தொடங்கினால் முதலிலேயே கேட்பவர்களுக்குள் நல்ல அபிப்ராயத்தை உண்டாக்கி விடலாம்.

இடையில் அமையும் உரைக்கு ‘தொடுப்பு’ என்று பெயர். இடையில் பேசும் கருத்துக்கள் தெளிவாகவும் கேட்பவர்களுக்குப் புரியும் வகையிலும் அமைதல் வேண்டும் என்றும் தெரிவித்த அவர், முடிவு நறுக்கு தெறித்தாற் போல் இருக்க வேண்டும். அதே நேரத்தில் குறிப்பிட்ட கால அவகாசத்தில் பேச்சை முடித்துவிட வேண்டும் என்றும் அழுத்தமாகச் சொன்னார். பின்னர் ஒவ்வொருவரையும் ஒரு நிமிடம் பேசச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்தார். இந்தப் பயிற்சி மாணவர்களுக்கு நிறைய பயன் தருவதாக அமைந்தது.